# வள்ளியம்மை சரித்திரம்

சென்னைப் பல்கலைக்கழகம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு.

பதிப்பு
**நா. ரேணுகா,**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

**தமிழிலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம்**
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

# வள்ளியம்மை சரித்திரம்

சென்னைப் பல்கலைக்கழகம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு.

பதிப்பு
**நா. ரேணுகா,**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

**தமிழிலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம்**
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

சுவடியியல்

மற்றும்

பதிப்பியல்

பட்டயதிற்காக

அளிக்கப்பட்ட

பதிப்பு வரிசை எண்.

**நா. ரேணுகா,**
சுவடியியல் மற்றும் பதிப்பியல்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

# ஆய்வாளர் உறுதிமொழி

பாண்டிக் கவிராஜருடைய சகோதரி சொன்ன கதையாகிய **'வள்ளியம்மை சரித்திரம்'** என்னும் இந்நூல் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக எனது சொந்த முயற்சியால் ஓலைச்சுவடியிலிருந்து பதிப்பித்து உருவாக்கப்பட்டதாகும். இதற்கு முன் வேறு எந்த ஆய்வுப்பட்டத்திற்கும் இப்பதிப்பு நூல் அளிக்கப்படவில்லை என உறுதிகூறுகிறேன்.

சென்னை - 600 005. **(நா. ரேணுகா)**
நாள் :

**வீ.அரசு,**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

பாண்டிக் கவிராஜருடைய சகோதரி சொன்ன கதை யாகிய **'வள்ளியம்மை சரித்திரம்'** என்னும் ஓலைச் சுவடி நூலை மேற்படி சுவடியிலிருந்து பெயர்த்து எழுதி **நா. ரேணுகா** செய்துள்ள இப்பதிப்பு சென்னைப் பல்கலைக் கழகம் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காகப் பதிப்பிக்கப்பட்டது என்றும் இப்பதிப்பின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்றும் சான்று அளிக்கிறேன்.

சென்னை - 600 005
நாள் :

**( வீ. அரசு)**
மேற்பார்வையாளர்.

# நன்றியுரை

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் சேர்ந்து பயிலவும் சுவடிப் பதிப்பைச் செய்யவும் வாய்ப் பளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் **பேராசிரியர் வீ. அரசு** அவர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"வள்ளியம்மை சரித்திரம்"** என்னும் ஓலைச் சுவடியைப் பதிப்பிப்பதற்கு நெறியாளாராக இருந்து சுவடிப் பதிப்பு முறையை எடுத்தியம்பிய **வீ. அரசு** அவர்களுக்கும் யாப்பு குறித்த விளக்கங்களையும் சுவடிப் பதிப்பின் நுட்பங்களையும் விளக்கிய **ய. மணிகண்டன்** அவர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"வள்ளியம்மை சரித்திரம்"** என்னும் ஓலைச் சுவடியைத் தந்துதவிய அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தார்க்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல இடையூறுகளுக்கு இடையிலும் படிக்க வைத்த எனது பெற்றோர் **து. நாராயணன் – அமுதா** அவர்களுக்கும், சுவடிப் பதிப்பிற்கு எல்லா வகையிலும் துணையாய் நின்ற எனது துணைவர் **வ. இளங்கோவன்** அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுளேன்.

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| * முன்னுரை | 11 |
| * நூலாராய்ச்சி | 13 |
| * நூலாசிரியர் | 17 |
| * வள்ளியம்மை சரித்திரம் - நூல்மூலம் | 19 |
| * செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 53 |
| * அருஞ்சொற்பொருள் அகராதி | 54 |

# முன்னுரை

சங்க நூல்களிலிருந்து முருகன் பற்றிய தொன்மங்கள், புராணக் கதைகள் வழக்கில் இருந்து வந்தன. சங்க காலத்தில் முழுமுதற் கடவுளாய் அச்சமுதாயத்தில் முருகன் வழிபாடு ஓங்கி இருந்தது. பின்னர் தொய்வு அடைந்து மீண்டும் கச்சியப்பர் காலத்தில் முருக வழிபாடு ஏற்றம் பெற்றது.

முருக வழிபாட்டுடன் முருகன் தொடர்பான புராணக் கதைகள் வழங்கப்பட்டு வந்தன. அவற்றுள் முருகன் குறமகளான வள்ளியை மணமுடித்த நிகழ்ச்சி கதைப் பாடலாகவும், கதையாகவும், நாடகமாகவும் பல வடிவங் களில் பரந்திருந்தன.

## ஏட்டிலக்கியத்தில் முருகன் - வள்ளி - செய்திகள் :

சங்க இலக்கியம் முதற்கொண்டு இன்று வரையில் பல நூல்களில் முருகன் - வள்ளி கதைகள் பயின்று வருகின்றன.

முருகனுடன் வள்ளி களவு உடன்போக்கு சென்றதை நற்றிணை,

**"என்னுள் வருதியோ நன்னடைக் கொடிச்சி**
**முருக புணர்ந் தியன்ற வள்ளிபோல"** (நற்.82:4)

என்றும்,

முருகன் வள்ளியை மணம் புரிந்ததைப் பரிபாடல்,

**"குறப்பிணாக் கொடியைக் கூடியோய்"** (பரி.19:95)

என்றும் கூறுகிறது.

சிலப்பதிகாரம் வள்ளியை, முருகன் மனைவியாம் என்றும், 'குறமகள்' என்றும் குறிப்பிடுகிறது. குன்றக் குரவையில் வெறியாட்டின் போது வள்ளியுடன் முருகன் நீலப் பறவையின் மீது வருவான் என்ற செய்தி தரப் பட்டுள்ளது.

பரிபாடல், முருகன் வள்ளியை மணந்ததால் தெய்வானை வருந்தியதாகவும், கண்ணீர் சிந்தியதாகவும்; முருகன் தெய்வானையிடம் சேர்ந்த போது வள்ளி சினந்த தாகவும், வள்ளி - தெய்வானை சண்டையிட்டுக் கொண்ட தாகவும் காட்டுகிறது.

திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம் முதலான நூல்களிலும் இச்செய்திகள் உள்ளன.

நாட்டுப்புற வடிவங்களில் இச் செய்திகள் பல பரிமாணங்களைப் பெற்றுள்ளன. அவற்றுள் வாய்வழியாக சொல்லி செவி வழியாக கேட்கப் பட்டு வந்த கதையாடல் வடிவங்களைப் பதிவு செய்தமை குறைவே. கதைப் பாடல்கள் பதிவு செய்ததைப் போல் இவற்றைப் பதிவு செய்ய தவறிவிட்டனர். கிடைக்கும் இக் கதையாடல் வடிவங் களையும் ஓலைச் சுவடியிலிருந்து பதிப்புக்குக் கொணர்தல் காலத்தின் தேவை.

இந்த நோக்கத்தோடு பாண்டிக் கவிராஜருடைய சகோதரி சொன்ன 'வள்ளியம்மை சரித்திரம்' என்ற சுவடி சென்னைப் பல்கலைக் கழகம் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காகப் (2003 - 2004) பதிப்பிக்கப் படுகிறது.

# நூலாராய்ச்சி

புராணச் செய்திகளை வாய்மொழி கதைகளாக்கி பலர் கேட்கச் சொல்லி வந்தனர். இக் கதைகள் வாய்மொழி மரபாகவே கடந்து வந்தன. இதனைச் சுவடியில் பதிவு செய்தல் என்பது குறைவாக இருந்தன.

பாண்டிக் கவி ராஜருடைய சகோதரி அவர்கள் சொன்ன 'வள்ளியம்மை சரித்திரம்' என்னும் இக்கதையாடல் சுவடியில் பதிவு செய்துள்ளமை கவனத்திற்குரியது. இந் நூல் காப்புப் பாடலுடன் தொடங்கி, கதை ஆற்றொழுக்கு நடையில் விரிந்து செல்கிறது.

## வள்ளியம்மை சரித்திரம் - சுவடிக் குறிப்பு

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 'வள்ளியம்மை சரித்திரம்' என்ற ஓலைச் சுவடி டி. ஆர்.2213 என்ற எண் கட்டுக்குள் உள்ளது. இச்சுவடியைத் தாளில் படியெடுத்துப் பாதுகாக்கப்பட்டுள்ள தாள் சுவடியும் இந்நூலகத்தில் உள்ளது. இத்தாள் சுவடி 1956 ஆம் ஆண்டு கே. சாரதா என்பவரால் படியெடுக்கப்பட்டுள்ளது.

'வள்ளியம்மை சரித்திரம்' என்னும் இச்சுவடி இந் நூலகத்திலிருந்து இதுவரையில் அச்சிடப்படவில்லை. சுவடி நிலையிலே உள்ள இச்சுவடியைச் சென்னைப் பல்கலைக் கழகச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காகப் பதிப்பிக்கப்படுகிறது.

## புற அமைப்பு

'வள்ளியம்மை சரித்திரம்' என்னும் இச்சுவடியின் ஏடுகள் சிதிலம் அடைந்த நிலையிலும், ஏடுகள் ஒழுங்கற்ற நீள அகல வடிவிலும் உள்ளன. எழுத்துகள் தெளிவின்றியும் உள்ளன.

ஏட்டினுள் எழுதப்பட்டுள்ள அடிகள், பகுப்புகள் அளவொத்துக் காணப்படவில்லை.

## அக அமைப்பு

காப்புப் பாடலுடன் நூல் தொடங்குகிறது. இறுதியில்,

**"இந்தக் கதையை யெழுதிப் படித்தவர்கள்**
**பிரியமுடன் கேட்டவர்கள் புத்திரனைப் பெற்றிடுவர்**
**வருந்தியே கேட்டவர்கள் மைந்தர்களைப்**
**பெற்றிடுவர்"**

என்று இக்கதையைக் கேட்பதால் இன்ன நன்மை விளையு மென்று கூறி முடிகிறது.

## COLOPHON குறிப்பு :

இந்நூலின் இறுதி ஏட்டில்,

"சரஸ்வதி விலாசத் தமிழ்த் தலைமைக் காரிகை முதல் சகல கலைக்கு ஞானமுந் தெரிந்து தெளிந்த பாண்டிக் கவிராஜருடைய சகோதரி சொன்ன கதை" என்ற குறிப்பு காணப்படுகிறது.

இக்குறிப்பினால் நூலாசிரியர் பெண் என்பதும்; அவர் சொன்ன கதையை யாரோ எழுதி வைத்தனர் என்பதும்; அவர்

கற்றுத் தேர்ந்த குடும்பத்தின் வழி வந்தவர் என்பதும் பெறப்படுகிறது.

**சுவடியில் காணப் பெற்ற பிழைகளும் திருத்தங்களும் :**

* இச்சுவடியில் பிழையாக எழுதப்பட்ட தொடர்கள் அடிக்கப் பெற்று, அவ்விடத்திற்குரிய சொல் எழுதப் பெற்றுள்ளது.

சான்று : ~~இருபுறமும்~~ பூரித்து - இரு தோளும் பூரித்து

* விடுபட்டுப் போன எழுத்துகள் அவ்விடத்திற்கு நேர்க் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

சான்று : பிடிப்பனடி தனக்கடிமை
உன்

**பதிப்பு நெறிமுறை :**

இந் நூலகத்திலுள்ள ஒரே சுவடியைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. பதிப்பில் செய்ய வேண்டிய சில மாற்றங்களை மட்டும் செய்யப்பட்டுள்ளன.

* சுவடியிலுள்ள மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி யிடப் பட்டன.

* எகர, ஏகர உயிர்எழுத்துக்கு வரிவடிவில் வேறு பாடு காட்டப்பட்டுள்ளது.

* ரகர, ா உயிர்மெய் எழுத்துக்கு வரிவடிவில் வேறுபாடு காட்டப்பட்டுள்ளது.

* ழகரம் ளகரமாக எழுதி இருந்தது. அவை சரியாக கொடுக்கப்பட்டுள்ளது.

குளியில் - குழியில்

யேந்திளையே - யேந்திழையே

* றகரம் ரகரமாக எழுதப்பட்டிருந்தது. அதனையும் மாற்றி எழுதப்பட்டுள்ளது.

பதரி - பதறி

விசிரி - விசிறி

## பேச்சு வழக்குச் சொற்கள்

இச்சுவடியில் சில பேச்சு வழக்குச் சொற்கள் உள்ளன. அவற்றுள் சில :

பொலம்பி; பத்தாவு; கோபிச்சு; புலி நெகம்; வீத்திருக்கும்; கொடமல்லி; சக்கரை; ஆகடியம், எகத்தாளம்.

போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

# நூலாசிரியர்

வாய்மொழி கதையாடலாய் சொல்லப்படும் கதை களுக்குச் சொல்பவரே மூல ஆசிரியர். அவ்வாறே இக் கதையைச் சொன்னவரென சுவடியின் பின்குறிப்பான (Colophon) "சரஸ்வதி விலாசத் தமிழ்த் தலைமைக் காரிகை முதல் சகல கலைக்கு ஞானமுந் தெரிந்து தெளிந்த பாண்டிக்கவிராஜருடைய சகோதரி சொன்னகதை" என்று ரைக்கிறது. இக்குறிப்பினால் "வள்ளியம்மை சரித்திரம்" என்னும் சுவடி நூலின் கதையைச் சொன்னவர் பாண்டிக் கவிராஜருடைய சகோதரி என்பது பெறப்படுகிறது.

பாண்டிக் கவிராஜருடைய சகோதரி என்று மட்டுமே தரப்பட்டுள்ளது. ஆசிரியருடைய முழுப் பெயர் எங்கும் குறிக்கப்படவில்லை.

பாண்டிக் கவிராஜடைய சகோதரி அவர்கள் வள்ளியம்மை சரித்திரம், மேனகை சரித்திரம் முதலான புராணச் சரித்திரங் களைக் கதையாடல்களாய் சொல்லிவந்தவர்.

கதையாடல்கள், கதை சொல்லும் வழக்கம் மிகுதியும் பெண்களிடம் காணப்பட்டது என்பது உறுதிப்படுகிறது. பெண்கள் புராணக் கதையைப் புனைந்து சொல்லி வந்தார்கள் என்பதை இதனூடாக பெறப்படுகிறது. இவரைப் போன்றே பல பெண்கள் கதைகளைச் சொல்லி பிறரை மகிழ்வித்திருக்கக் கூடும். அவர்களுடைய படைப்புகளும் இதுபோன்று பதிவு செய்திருப்பின் நன்றாய் இருந்திருக்கும்.

# வள்ளியம்மை சரித்திரம்

தேன்மொழி வள்ளி தன்னைத்
தினைப்புனந் தன்னில் கண்டு
கானக வேட ராகிக்
களைத்து மெய்மறந்து வேலர்
ஆனை விட்டரட்டி அன்னார்
அரிவையர் கொணர்ந்தா ரன்றே
நான்மகள் கதையாய்ப் பாட
வினாயகர் காப்புத் தானே. (1)

பாலைவனந் தனிலே பாலகியாள் உற்பவித்து
வள்ளி குழியில் மாதும்அவள் உற்பவித்தாள்
குவாகுவா யென்றழுத குரல்கேட்டு நாகமது
ஐந்தலை நாகமது அன்புடனே ஓடிவந்து
தேனெடுத்து வந்து திருவாயைத்தான் தடவி
வெய்யிற் படாதபடி விரித்துப் படமெடுத்து
காத்து மிருந்தது கருணையுள்ள நாகமிது

## நம்பிராசன் தேவிநாயகி குழந்தையைக் காணுதல்

நம்பிராசன் தேவிநாயகியாள் தானும் அப்போ
பத்தாவுந் தேவியுமாய் பாதை கடந்துவந்து

இருபேருமாகவே இருண்டவனத்தில் வந்தார்
நம்பிராசன் தேவி நங்கையம்மாள் தானும் அப்போ
வனங்கள் சுற்றிப்பார்த்து வருகின்ற வேளையிலே
இருவரையுங் கண்டவுடன் யியல்வான நாகமது
கந்தருக்கு மாலையிட்டு கருணையுடன்
வாழ்ந்திருப்பாய்
வேலவர்க்கு மாலையிட்டு மேன்மையுடன்
வாழ்ந்திருப்பாய்
கந்தருடைய தேவியென்று காட்டுக்குள் போனவுடன்
நம்பிராசன் தேவி நங்கையம்மாள் அப்போது
குருத்த மரத்தடியில் குழந்தைதனைக் கண்டவுடன்
பார்வனத்தனிலே பாலகியைக் கண்டவுடன்
இன்பம் குளிர்ந்து இருந்தோளும் பூரித்து
வாரியெடுத்து மார்போடே தானணைத்து
கண்ணோடணைத்துக் கனிவாயை முத்தமிட்டு
உச்சிமுகந்து உள்ளங்கால் முத்தமிட்டு,
நங்கையம்மாள் அப்போது நாயகனைத்தான் பார்த்து
ஏழுபேர் ஆண்குழந்தை இயல்பாயிருக்கையிலே
மகவில்லையென்று மனந்தளர்ந்தோமே இருவர்.
கோதை உமையாள் கொடுத்த திரவியந்தான்.
நங்குலத்துக் கந்தர் நமக்களித்த பாக்கியந்தான்.
ஈஸ்வரனார் தான் கொடுத்த இலஞ்சியத்தைப்
பாருமென்றாள்.
கொங்கை அமிர்தங் கொடுத்தாள் குறமாது.

இருபேருமாக இருண்ட வனங்கடந்து
தேத்துகடந்து தெருவீதிதான் கடந்து
வேலர் துணையென்று வீடு வந்து சேர்ந்தார்கள்.

## குழந்தையைச் சீராட்டி பெயரிடுதல்

நம்பிராசன் தேவி நாயகியாள் தானும்அப்போ
அறப்பு மஞ்சள்தான் அரைத்து அன்பாய் குளிப்பாட்டி
நீராட்டித்தான் துடைத்து நிலைக்காப்புப் பொட்டுமிட்டு
நெற்றிக்கு நீரணிந்து நேர்விழிக்கு மையெழுதிக்
காலில் சிலம்பணிந்து கைக்கு வளைகாப்புமிட்டு
கொக்குமணி அக்குமணி குறுப்பாசிதான்தரித்து
அறுநாள் அரமுடியும் ஐம்பொன் சலங்கைகட்டி
உயர்சரிகைப் பாவாடை யொட்டியாணமுந் தரித்து
புலிநகமுஞ் சங்கிலியும் பொற்பதக்கந் தான் தரித்து
வைத்தும் இருந்தார்கள். மகிழ்வுடனே தாமிருவர்
வள்ளியம்மாளென்று மகிழ்வுடனே பேருமிட்டாள்
தையலர்க்கு தொட்டிச் செய்யத் தச்சரைத்தான் அழைத்து
வையிற் பலகாய் மகிழ்வுடனேதான் சேர்த்து
மாணிக்கச் சங்கிலியை வகையுடனேதான் மாட்டி
பட்டினால் மெத்தை பசும்பொன் தலைகாணியிட்டு
மேலில் அணுவண்டாமல் மேல்தட்டி தொங்கவிட்டு
தோரணங்கள் கட்டித் துலங்க அலங்கரித்து
தோகையர்கள் யெல்லாம் தொட்டி அமைத்தார்கள்
நம்பிராசன் தேவி நங்கையம்மாள் தானும்போ
வள்ளிக் கொடியை வளர்த்தினாள் தொட்டி தன்னில்.

## கொச்சகம்

கண்ணேயென் கண்மணியே கற்பகமே பொற்பாவாய்
பெண்ணேக னியே பிழைபொறுக்கும் நாயகமே
மனக்கவலை தீர்க்கவென்று வானுலகில் உற்பவித்து
தினைப்புனங்கள் காக்கவந்த செல்வமே கண்மணியே
உன்னழகைக் கண்டு உகந்து மகாமுனிவர்
மின்பின்பட மெழுதி வேலவர்தன் கைக்கொடுக்க
வாங்கிஅந்த வேலவர் வடிவேல் உருவமிட்டு
எங்கிவன் வேடரென யெதிர்வரவுங் கண்டவளோ
களைத்து மயங்கிக் கதிர்வேலவர் கையேந்த
விளைந்த தினைமா விடித்து மேன்மையுடன் ஈய்ந்தவளோ
அந்தமுடன் பூவுலகில் யாமோ மனமகிழ
கந்தருக்கு மாலையிட வந்திருக் கண்மணியோ
சேயேநீ கண்வளராய் செப்பமுடன் என்றுசொல்லி
தாயார் குறமாது தாராட்டி நின்றனளே (2)

## வள்ளி தினைப்புனம் காத்தல்

பாலமுத மூட்டிப் பண்பாய் வளர்த்தார்கள்
அறுசுவையோடு அமுர்தங் கொடுத்தார்கள்
வளர்பிறை போலே வளர்ந்தாள் குறமாது
பத்து வயசாகிப் பதிமூன்றாந்தன் வயசில்
ஏழ் அண்ணன்மாரும் இயல்பா யெழுந்திருந்து
உழுது தினைவிளைத்து உயர்ந்த பரண்போட்டு

பவளக்கால் நாட்டி பாங்காய்ச் சரம்போட்டு
வச்சிரப்பலகை வகையுடனே தான் பரப்பி
தோரணங்கள் கட்டித் துலங்க அலங்கரித்து
பங்கிளியாள் வீற்றிருக்க பரண்போட் டலங்கரித்து
அன்னமே தேனே அமுர்த சிகாமணியே
வண்ணக்கிளியே மாதர் சிகாமணியோ
என்னோடு உடன்பிறந்த யியல்பான கண்மணியே
வாரு மம்மாளென்று வருசையுடன் தானழைத்து
பாங்கிமார் தன்னுடனே பரண்மீதில் யேத்திவைத்து
தங்கக் கவன்எடுத்து தையநல்லாள் கைக்கொடுத்து
வெள்ளிக் கவண்எடுத்து மெல்லி நல்லாள் கைக்கொடுத்து
பட்சி பறக்காமல் பறவைவந்து நாடாமல்
காகம் பறவாமல் கருக்குருவி நாடாமல்
சிட்டுப் பறவாமல் சேவல்வந்து நாடாமல்
கிள்ளை பறவாமல் கிளிகள் வந்து மோதாமல்
இவ்வனத்து பட்சியெல்லாம் இங்குவந்து நாடாமை
கண்மணியே நீயும் கவண் வீசிக் காருமென்று
காருமம்மா வென்று கட்டளையு மிட்டார்கள்
அண்ணன்மார் ஏழ்பேரும் அரண்மனைக்குப் போனார்கள்
அப்போது வள்ளியம்மாள் அரிவையர்கள் தன்னுடனே
வெள்ளிக்கவண்யெடுத்து மெல்லிநல்லாள் வீசலுற்றாள்
தங்கக் கவண்யெடுத்து தையநல்லாள் வீசலுற்றாள்
ஆலோலம் ஆலோலம் அன்னங்களே ஆலோலம்
பட்சிகளே ஆலோலம் பறவைகளே ஆலோலம்

மாடப்புறா ஆலோலம் மயிலினங்காள் ஆலோலம்
சிட்டுகளே ஆலோலம் சேவல்களே ஆலோலம்
கிள்ளைகளே ஆலோலம் கிளியினங்காள் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் அன்னங்களே ஆலோலம்
ஆலோலமென்ற சத்தம் அண்டமெல்லாங் கேட்டிடவே

## தினைப்புனத்திற்கு நாரதர் வருதல்

நாராசம் வார்த்தது போல் நாரதரும்தான் கேட்டு
ஏதோ அதிசயங்கள் யாம் அறியவேணுமென்று
பொன்னுலகை விட்டுப் புறப்பட்டார் நாரதரும்
மாதுதிணைப் புனத்தில் வனந்தாரே நாரதரும்
கண்டாரே நாரதரும் கன்னிதிரு அழகை
பார்த்தாரே நாரதரும் பாவை திருவழகை
கண்டாரே நாரதரும் கன்னி திருவழகை
ரம்பை உருவசியோ இராச்சியத்தில் பெண்ணரசோ
வானுலகில் பெண்ணரசோ வனத்தில் இருந் தேவதையோ
காட்டில் நளன்விட்டகன்ற கன்னி தமயந்தியோ
ஸ்ரீராமர் விட்டகன்ற சீதை மனோன்மணியோ
மன்மதனார் தேவிமாது ரதிப் பெண்ணரசோ
வண்டோதரியோ வயங்கு நளாகினியோ
சந்திரமதியோ தயங்குகின்ற லெட்சுமியோ
ஆரென்றெடுத்துரைப்பேன் அரிவை திருவழகை

## வள்ளியின் அழகை வருணித்தல்

வான்மேகந்தன்னை மருட்டுகின்ற கூந்தலும்
மூன்றாம் பிறையை மிரட்டும் நுதலழகும்
பார்த்தன் கைவில்லை பழிக்கும் புருவமும்
சேல் கெண்டையோடெதிர்த்து செயிக்கும் விழியழகும்
வள்ளைதண்டைப் போல் வயங்குஞ் செவியழகும்
எள்ளு மலரெனவே யிலங்கு குமிழ் நாசியும்
பவளக்கொடிபோலே பத்தினியாள் தன் அதரம்
முல்லை யரும்பெனவே மொய்குழலாய் பல்வரிசை
சங்கை நிகர்கழுத்தும் சாய்ந்த கமுகின்புயமும்
கும்பஸ்தனமுங் கொடியிடையும் பொப்பினையும்
வாழைத் தண்டைப்போல் வயங்குந் தொடையழகும்
முத்துச் சிப்பிபோல் முழங்காலின் தன்னழகும்
கடலின் மகரமெனக் கணைக்கால் திருஅழகும்
பொஸ்த்தம் சேர்த்தது போல் பொற்கொடியாள் பாதமும்

## வள்ளியின் வரலாறு வினவுதலும் உரைத்தலும்

தேன்மொழியாள் தன்னழகை சித்திரப் படமெழுதி
பைங்கிளியாள் தன்னழகைப் படத்தில் எழுதிவைத்து
வரலா றறிவமென்று வாராரே நாரதரும்
மாதுதினைப்புனத்தில் வந்தாரே நாரதரும்
பைங்கிளியாள் வீற்றிருக்கும் பரணெதிரே வந்து நின்றார்
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்குந்தான் பார்த்து
பாங்கிமார் தன்னுடனே பரணைவிட்டுக் கீழிறங்கி

தேன்மொழிமார் தன்னுடனே தெண்ட நிட்டார் வள்ளியம்மாள்
தெண்டநிட்ட போதே சிலாக்கியுங் களுண்டாகும்
கந்தருக்கு மாலையிட்டு கருணையுடன் வாழ்ந்திருப்பாய்
வேலவர்க்கு மாலையிட்டு மேன்மையுடன் வாழ்ந்திருப்பாய்
சிலாக்கியமாய் வாழ்ந்திரு என்று திருநீறும்தான் கொடுத்தார்
வாங்கியணிந்தாள் மகிழ்வுடனே வள்ளியம்மாள்
ஆரம்மா நீதான் அறிய உரையுமென்றார்
தாய்தந்தை பேரேது தையலரே சொல்லு மென்றார்
உன்னுடைய பேரேது உன்ஊரேது சொல்லுமென்றார்
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்கும் யேதுசொல்வாள்
தாயார்பேர் நங்கையம்மாள் தந்தைபேர் நம்பிராசன்
என்பேரு வள்ளியம்மாள் இருக்கும்பதி சித்தூரென்றாள்

## வேலரிடம் வள்ளியின் திருவழகைக் கூறுதல்

வரலா றறிந்து வாராரே நாரதரும்
திணைப்புனத்தை விட்டகந்து சேர்ந்தாரே நாரதரும்
வனமாவளங்கடந்து வாராரே நாரதரும்
திருச்செந்தூர் வீதியிலே சென்றாரே நாரதரும்
வடிவேலர் வீற்றிருக்கும் மண்டபத்தில் வந்தமர்ந்தார்
அன்னார்தரை கண்டடேனே ஆறுமுக வேலவரும்
சிரித்து மகிழ்ந்து சேவலருமேது சொல்வார்
என்னென்ன கண்டுவந்தீர் எனக்காகச் சொல்லுமென்றார்
ஏதோவதிசயங்கள் எனக்கறியச் சொல்லுமென்றார்
ஆரணியந் தன்னிலொரு அரிவையரைக் கண்டேனய்யா

நான்பாராத தேசமில்லை பணியாத கோவிலில்லை
மிதியா வனங்களில்லை முழுகாத தீர்த்தமில்லை
நான்கண்டு வந்த கன்னியர்கள் கணக்கி லடங்காது
அத்தண்ட மாதரெல்லாம் அரிவை தனக்கொவ்வாது
ஆயிர னாவுடைய ஆதிசேடன் தன்னாலும்
சொல்லமுடியாது தோகை மின்னார் தன்னழகை
என்னுடைய நாவால் எடுத்துரைக்க கூடுமோ
பாருமையா வென்று படமெடுத்து கைக்கொடுத்தார்
சித்திரப் படமெடுத்து சேவலனாற் கைக்கொடுத்தார்.

## விருத்தம்

கையி னில்படத்தை வாங்கி
களைத்து மெய்மறந்து வேலர்
தைய லைக்கண்டு யானும்
தழுவி யேயணைத்து கட்டி
செய்ய வாயமுர்த மூட்டி
சேரு நாளென்நா ளோமோ
மெய்ய துமறந்து வேலர்
வெருவி யேதரையில் வீழ்ந்தார் (3)

## வேலரின் புலம்பல்

கண்ணே கண்ணே யென்று கலங்கி யந்த வேலவரும்
பெண்ணே பெண்ணே யென்று புலம்பி னார்வேலவரும்
கட்டி யணையாயோ கனித்து முத்தம் தாராயோ

என்னை மருவாயோ யிதள முத்தம் தாராயோ
வாயைத் திறவாயோ வளையசை குலுக்காயோ
வாய்பேசா மந்திரமோ மவுனமோ கண்மணியே
பூசை முகமோ பொற்கொடி நாயகியே
அனுட்டான வேளையோ அன்னமே சொல்லுமென்றார்
என்மேல் மனஸ்தாபம் உண்டோடி யேந்திழையே
மனஸ்தாப முண்டானால் வாய்த்திறந்து சொல்லுமென்றார்
தாளைப் பிடிப்பனடி உன்தனக்கடிமையானேனடி
கண்ணே கண்ணே யென்று கலங்கியந்த வேலவரும்
பெண்ணே பெண்ணே யென்று புலம்பியந்த வேலவரும்
வள்ளிவள்ளி யென்று மயங்கியந்த வேலவரும்
மெத்த மயங்கி மெத்தையின்மேல் பள்ளிகொண்டார்
பக்கதில் நின்ற பாங்கியர்கள் ஓடிவந்து
தெய்வானை வீற்றிருக்கும் சித்திரமணி மண்டபத்தில்
தாயே தயாபரியே சங்கரி மனோன்மணியே
சாமி மயங்கித் தயங்கிக் கிடக்கிறார்.
ஆரோ ஒருதவசி அருகே இருக்கிறான்
வந்துநீர் பாருமென்று வரிசையுடன் தானழைத்தார்
தேவேந்திரன் புதல்வி தெய்வானை தான்கேட்டு
பதறியே ஓடிவந்து பாவையரும் தான்பார்த்து
வாரியெடுத்து மார்போடே தானணைத்து
கோராத முத்தைக் குடத்தில் சொரிந்தது போல்
முத்து வடத்தை முடிச்சுருவி விட்டது போல்
பகீரதன் செய்தவத்தால் பாரில்வெள்ளம் வந்ததுபோல்

மார்மேலே நீர்சொரிய மங்கையருந்தான் அமுது
ஓகெடுவாய் நாரதனே உனக்கு நான்யென்ன செய்தேன்
கண்டாளா நாரதனே சாமிக்கு யென்னசெய்தாய்
சித்திரப் படங்கொடுத்து மித்திரங்கள் செய்தாயே
கம்பத்தில் ரெண்டானை கட்ட நினைத்தாயே
கோபித்துக் கண்சிவந்து கொம்பேறி யடையாளும்
பன்னீருங் கொண்டுவந்து பாவையருந் தான்தெளித்தாள்
பொன்விசிறி கொண்டு பொன்கிளியும் வீசலுற்றாள்
பக்கத்தில் நின்றே பாங்கிமார் வீசலுள்ளாள்
சோபந் தெளிந்து துணுக்கென்று தானெழுந்து
இந்திரனோர் கண்மணியே யென்பிராண நாயகியே
மனசுக் குகந்தவளே மாதர் சிகாமணியே
தெய்வானை மாதேயென் சிந்தைக் குகந்தவளே
ஏதோ வியாதியென்று யெண்ணாதே ஏந்திழையே
காமனார் செய்த களைதானடி கண்மணியே
மன்னவழார் செய்த மயக்கமடி மாதரசே
படத்தில் இருக்கிற பாவையரைக் கொண்டுவந்து
மடலில் இருக்கிற மாதரசை கொண்டுவந்து
எனக்குநீர் மாலையிட்டால் என்பிராணன் நிற்குமென்றான்
தெய்வானை மாது சிந்தைமிகக் கலங்கி

## விருத்தம்

வனக்குற மாது உருவம் மடல்தனில் கண்ட போதே
தனக்கொரு யிணையு மில்லா சாமியைக் கோலங் கொண்டீர்
எனக்கொரு தேதிதா னுண்டே என்றுதெய் வானை மாது
அனற்கிடு மெழுகே போல அமுதவள் புலம்பு வாளே (4)

மண்டல மதிக்க யென்னை மகிழ்ந்துநீர் மாலை யிட்டீர்
குண்டனி நாரத னருள் கொடுத்தகைப் படத்தி னாலே
விண்டுதோ யென்மே லாசை வெறுத்துமெய் மறந்தீ ரென்று
அண்டருக் கதிபன் பாவை யமுதவள் புலம்பு வாளே. (5)

## தெய்வானைப் புலம்பல்

ஆறுமுகத் தோடும் அசுரன்முடி செயித்தீர்
தேவேந்தி ரனாரும் சிந்தைமிக மகிழ்ந்து
வெள்ளானை வெண்குடைகள் வேண விருதுடனே
பொன்னுலகில் யென்னைப் புகழ்ச்சியாய் மாலையிட்டீர்
என்மேலே ஆசை வெறுத்தீரோ யென்சாமி
என்னை மறந்தீரே யென்பிராண நாயகரே
ஈனக்குறத்தியின் மேல்இச்சை கொண்டீர் யென்சாமி
கூடையிடுக்கிக் குறம்பாடும் சாதியல்லோ
கூடைமுறம் பொத்தி குடியாளர் வீதியெல்லாம்
வாங்கிப் பொசித்து வயிர்வளர்க்குஞ் சாதியல்லோ
மாதைநீர் மாலையிட்டால் வானுலகோர் யேசாரோ

தனிவழியே போனவரைத் தாலிபாசி கொள்ளையிட்டு
திருநாக் கடையெல்லாஞ் சிரிக்கின்ற சாதியல்லோ
தேன்மொழியை மாலையிட்டால் தேசத்தார் யேசாரோ
வக்காவுங் கொக்கும் மதுவுஞ்சில மாமிசமும்
பூனைக் கறியும் பொரிக்கின்ற சாதியல்லோ
பொற்கொடியை மாலையிட்டால் பூலோகத்தார் யேசாரோ
தெய்வானைச் சொல்லச் சேவலருந்தான் கேட்டு

## முருகனின் பதில்

என்னதான் சொன்னாலும் யேறாது யென்செவிக்கு
படத்தில் இருக்கும் பாவையரைக் கொண்டுவந்து
எனக்குநீர் மாலையிட்டால் என்பிராணன் நிற்குமென்றார்
தெய்வானை கேட்டு சிந்தைமிக தெளிந்து
விரும னெழுத்தை வெல்ல முடியாது
அயனா ரெழுத்தை யழிக்க முடியாது
தலையி லெழுத்தைத் தவிர்க்க முடியாது
குறமாதை மாலையிட்டுக் குவலயத்தில் வாழ்ந்திருஎன்றாள்
அந்தப் புளிப்பைப் பறித்துநீர் பாருமென்றார்

## வேலர் தினைப்புனம் செல்லல்

சந்தோசம் சந்தோசம் யெனஎழுந்தார் சரவணரும்
வாருங்காண் நாரதரே மாதுபுனங் காட்ட
நாரதரும் முன்னடக்க நாவலரும் பின்னடந்தார்
கல்லுங் காடும் கறையவழி நடந்தார்

முள்ளும் முறடும் மிதித்தேறித் தான்நடந்தார்
காடுகடந்து கரியவளங் கடந்து
வனமாய் வனங்கடந்து மாதுபுனத் தில்வந்து
தேன்மொழியாள் வீற்றிருக்கும் திணைப்புனத்தில் வந்துநின்று
பாருங்காண் சாமியுந்தன் பாவை திருஅழகை
கண்டீரோ சாமியுந்தன் கன்னி திருஅழகை
இளங்கதிரோன் போலே இருக்கிறாள் பாருமென்று
புகழ்ச்சியுடன் நாரதரும் பொன்னுலகம் போய்ச்சேர்ந்தார்

## விருத்தம்

பார்த்துமெய் மறந்து வேலர்
பாவைதன் அழகுக் கிந்த
நாற்றிசை தன்னில் வாழும்
நங்கைமா றிணையு மல்ல
மாற்றுரை யடங்காப் பொன்னோ
வஞ்சிதன் நிறமோ வென்று
போற்றியே வணங்கி வேலர்
புகழ்த்துமே வேட னானார். (6)

## வேலர் வேடனாய் உருமாறுதல்

தலையிலே குல்லாவுஞ் சல்லடமுந் தான்தரித்து
கச்சை வரிஞ்சுகட்டி கருங்கச்சை சுங்குவிட்டு
அம்புவில்லுங் கைபிடித்து ஆயுதமுந் தோளில்வைத்து

ஈட்டி சமுதாடு இடதுபுறந்தான் சொருகி
வையாபுரி நாதர் வனவேடர் ஆகிவிட்டார்
பைங்கொடியாள் வீற்றிருக்கும் பரணெதிரே வந்துநின்றார்

## வள்ளி வினவுதல்

அப்போது வள்ளியம்மாள் ஆரணங்குந்தான் பார்த்து
ஆர்காணும் வேடுவரே அறிய உரையுமென்றாள்
பெண்களுடைய கூட்டத்தில் புனவேடர் வந்ததென்ன
மாதருடைய கூட்டத்தில் வனவேடர் வந்ததென்ன
வந்ததொரு காரியத்தை வனவேடர் சொல்லுமென்றார்

## வனவேடராகி வந்த வேலர் வள்ளிக்குப் பதிலுரைத்தல்

மாதர் சிகாமணியே வனவேட்டை யாடவந்தேன்
ஆலோல மென்றசத்தம் ஆரணங்கே கேட்டதினால்
அறிந்து வருவமென்று அன்னமே யிங்குவந்தேன்
அதிரூபம் என்கன்னி யாரணியங் காப்பதென்ன
தாய்தந்தை பேரேது தையலரே சொல்லுமென்றார்
உன்னுடைய பேரேது ஊரேது சொல்லுமென்றார்
மாதர் சிகாமணியே வரலாறு உரையுமென்றார்
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்குந் தான்கேட்டு
தந்தைபேர் நம்பிராசன் தாய்பேர் நங்கையம்மாள்
என்பேர் வள்ளியம்மாள் இருக்கும்பதி சித்தூரென்றாள்
யேழண்ணன் மாரும் இயல்பாக யேருழுவார்

பெண்டுக ளெல்லாம் புனத்திக்களைப் பறிப்போம்
கூடையிலே சாதங் கொண்டுவந்து தான்கொடுப்போம்
காடு விழைந்தவுடன் காத்திருப்ப தெங்கள்குலம்
எங்களுட சாதிக்கு இயற்கை யென்றாள் அப்போது

## வேலர் திருச்செந்தூர் சிறப்புரைத்தல்

வேடரு வாகிவந்த வேலவருந் தான்கேட்டு
காட்டிலே வந்து கருகிமுகம் வாடுவதேன்
வெயிலிலே நின்று வெம்பிமுகம் வாடுவதேன்
ஆரணங்கே நீயும் ஆரணியங் காப்பதென்ன
திருச்செந்தூ ரென்பதிதான் தேன்மொழியே நீகேளாய்
திருச்செந்தூர் தன்னுனடைய சிறப்பிதத்தைக்
கேளுமென்றார்

எற்றனம் விலைமதிக்கும் ராசர்கள் வீதிகளும்
பாட்டுவான் வீதிகளும் பைங்கிளிமார் வீதிகளும்
எங்கெங்கும் வாவி ஏகலா இருக்குமடி
சண்முக நதியும் சரவணப் பொய்கையும்
அன்னதான மடமு ஆண்டவனார் சன்னதியும்
சதுரகிரி போலே சாதமங்கு வீற்றிருக்கும்
வந்தபேர்க் கன்னம் வாரிச் சொரியுறதும்
பாலும் பழமும் பஞ்சா மிர்தமும்
வெள்ளமாய் ஓடுமடி மெல்லியரே யென்பதியில்
சுற்றித் திருமதிலுந் துலங்கிய சீர்க்கோபுரமும்
எங்கெங்கும் பார்த்தாலும் இலங்குமயில் மண்டபமும்

வெள்ளியினால் அமைத்த விளங்கியசீர் மண்டபமும்
பொன்னால் அமைத்துப் பொலிந்த திருக்கோபுரமும்
ஆயிரக்கால் மண்டபமும் ஆறுகால் பீடமும்
பைங்கூனி உத்திரத்தில் பால்காவடி கோடி
சர்க்கரைக் காவடியுஞ் சதிருடனே வந்திறங்கும்
அக்கினிக் காவடியும் ஆனமச்சக் காவடியும்
வந்தி றங்குமடி மயிலணையே யென்பதியில்
இரதத்திலே யேறலாம் நாடுசுற்றிப் பார்க்கலாம்
வெள்ளி ரதமேறி வீதிசுற்றிப் பார்க்கலாம்
மயில்மீதி லேறாம் மண்டலங்கள் பார்க்கலாம்
பொற்கொடிமார் தன்னுடனே பொன்னூசல் ஆடலாம்
ஆயிழைமார் தன்னுடனே அம்மானை ஆடலாம்
தேவேந்திரன் புதல்வி தெய்வானை தன்னுடனே
சரியாக வீற்றிருந்து சிலாக்கியங்கள் பெற்றிடலாம்
என்னுடைய தோளில் எழுந்தருளீர் ஆனாக்கால்
கனப்பொழுதி லுன்னைத் திருச்செந்தூர் சேர்த்திடுவேன்
ஏந்திழையே நீயெனக்கு யென்னபுத்தி சொல்லுமென்றார்

## வள்ளி கோபப்படுதல்

அப்போது வள்ளியம்மாள் ஆரணங்குங் கோபமாய்
கோவைப் பழம்போலே கூர்விழிகள் தான்சிவக்க
கடுங்கோபங் கொண்டு கன்னியரும் யேது சொல்வாள்
ஆரடா வேடுவனே ஆகடியம் பேசுகிறாய்
வந்ததொரு வேடுவனே வாய்மதங்கள் பேசுகிறாய்
எகத்தாள வார்த்தை இடும்பாய் யெடுத்துரைத்தாய்.

## விருத்தம்

கன்னியென் றெண்ணா தென்னை
கானக வேடா் நீயும்
அன்னித மான வாா்த்தை
அகந்தையாய் பேசு கின்றாய்
சென்னியை அறுத்து யின்னாள்
சிதறிட அடிக்க வென்றே
என்அண்ணன் மாரை யீதோ
இனிதுடன் அழைப்பே னென்றாள். (7)

## வேலர் காதல்மொழி பேசுதல்

கூடினோ மானாக்கால் கோடியுண்டு சேனைதளம்
ஒருகோடி சேனைவந்து உயிர்ச்சேதம் செய்திடுவார்
அண்ணன்மார் வந்தால் அதஞ்செய்து போட்டிடுவார்
வீணாய் உயிர்போகும் வேடுவனே இப்போது
தப்பிப் பிழையுமென்றாள் தையநல்லாள் வள்ளியம்மாள்
வேடவனு ருவாகிவந்த வேலவருந் தான்கேட்டு
செத்துமடிஞ் சாலுஞ் சிவலோகஞ் சேர்ந்தாலும்
மாண்டுமடிஞ் சாலும் வைகுண்டம் சேர்ந்தாலும்
செத்த இடத்திலே செங்கழனிப் பூப்பூத்து
குடைமல்லிப் பூப்பூத்துக் கொண்டையிலே வீற்றிருப்பேன்
நெற்றிக்குப் பொட்டாவேன் நேர்விழிக்கு மையாவேன்
காலிற் சிலம்பாவேன் கைக்குவளைக் காப்பாவேன்

கச்சிதனத் திலிடும் ரவிக்கையாவனடி தையலரே
உடுத்திடையில் பட்டாடை ஆவேனடி உத்தமியே
சதரான மேனிக்குச் சாந்துப் புனுகாவேனடி
எந்தவித மானலும் இருப்பேனடி உன்னுடம்பில்
உன்னைவிட்டு நானும் ஒரு நாளும் போவதில்லை
உன்னைவிட்டுப் போனால் உயிரிழந்து போவேனடி
காமன் கணையாலே கணைதாங்கிப் போகுதடி
வேடனு ருவாகிவந்த வேலவருந் தானுரைக்க

## வள்ளி வனக்குறவர்களை அழைத்தல்

அதிகோப மாகி ஆரணங்கு வள்ளியம்மாள்
காண் இருபக்க கண்ணிரண்டும் காருஇரத்தம் பாய்ந்திடவே
பாங்கிமார் யெல்லோரும் பறணைவிட்டு கீழிறங்கி
ஓடியழை யுமென்றாள் ஒருகோடி சேனைகளை
கொம்பனைமா ரெல்லோரும் பதட்டமுடன் தான்நடந்து
கூவியழைத் தார்கள் கொம்பனைமா நெல்லோரும்
மாதரழைத்த மொழிவனக் குறவர்தான் கேட்டு
அம்புவில்லுங் கைப்பிடித்து ஆயுதமுந் தோளில்வைத்து
வந்து நிறைந்தார்கள் வனகுறவ ரெல்லோரும்
அவர்களைக் கண்டவுடன் ஆறுமுக வேலவரும்
வேடன் உருமாறி வேங்கைமர மாகிவிட்டார்
வனகுறவோ ரெல்லோரும் வள்ளிதனை பார்த்து
அன்னமே நீதான் அழைத்தவகை சொல்லுமென்றார்
ஆரோ ஒருவேடன் ஆரணியந் தன்னில்வந்து

பாவியந்த வேடுவனும் பறணருகே வந்துநின்று
வந்ததொரு வேடுவனும் வாய்மதங்கள் பேசுகின்றார்
எகத்தாள வார்த்தை இடும்பா யெடுத்துரைத்தான்
உங்களைக் கண்டவுடன் ஓடிஒளிந்து விட்டான்
அதனாலே அஞ்சி அழைத்தேனென் றாளாரணங்கு
அண்ணன்மார் கேட்டு ஆரணங்கே இப்போது
இந்த வனத்திலே ஏதோ வதிசயமாய்
வேங்கை மரமுளைத்து விருட்சமாய் தோணுதம்மா
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்கு ஏது சொல்வாள்
இந்த வனத்தில் விருச்சகத்தைக் கண்டதில்லை
ஆச்சரிய மென்றாளே ஆரணங்கு வள்ளியம்மாள்
வனக்குறவோர் அண்ணன்மார் மாதரசை தான்பார்த்து
வேங்கை மரம்முளைத்து விருச்சகமாய் தோணுது
உனக்குத் துணையாச்சு உத்தமியே யென்றுசொல்லி
சண்முகவே லாயுதரைச் சதாகாலந் தான்நினைத்து
வேலர் துணையிருப்பார் மெல்லியரே யுந்தனுக்கு
கண்மணியே உந்தனுக்குக் கந்தர் துணையிருப்பார்
அன்னமே நீதானும் அஞ்சாமல் காத்திருமென்றார்
அண்ணன்மார் யேழ்பேரும் அரண்மனைக்குப் போனார்கள்

## வேலர் வேதியராய் வருதல்

வந்த வனக்குறவர் மாளிகைக்குப் போனார்கள்
இந்த விதமாக இருக்கின்ற வேளையிலே
வேங்கை யுருமாறி விருட்சவுருவாகி விட்டார்

நாணைப் பூப்போலே நரைத்த சிகையழகும்
புருவம் விழிவெந்து பூழை ஓடுகிறதும்
தோலும் நரம்புந் தொங்குங் கிழவனுக்கு
உடம்பெல்லாம் நீறணிந்து உத்திராட்சந் தான்தரித்து
பூணூல் தான்தரித்துப் பீதாம்பர முடுத்தி
பீத்தக் குடைபிடித்துப் பிடிசொம்புங் கையெடுத்து
தடியூன்றித் தான்நடந்து தள்ளாடிக் கீழ்வீழ்ந்து
மாது தினைப்புனத்தில் வந்தாரே வேதியரும்
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்குந் தான்பார்த்து
எங்கிருந்து இங்குவந்தீர் யெனக்காகச் சொல்லுமென்றார்
அன்னம் புசித்து அஞ்சாறு நாளாச்சு
அன்னக் களையெனக்கு அகோர மாகுதம்மா
சாதங் கொடுத்தால் தசகோடி மோட்சமுண்டு
அன்னங் கொடுத்தால் அதிகபல னுண்டாகும்
வேலருரு மாறிவந்த வேதியருந் தானுரைத்தார்
வேதியரைத் தான்பார்த்து மெல்லிநள்ளாள் தான்சிரித்து
ஆரணியந் தன்னிலே அன்னங் கிடைக்குமோ
தினைக்கதிரைக் கொய்துவந்து தேன்மொழி மாரெல்லம்
கல்லுரலில் போட்டிடித்துக் கன்னியர்க ளெல்லோரும்
தேக்கிலை யினாலே தள்ளிக் கொழித்தெடுத்து
கொம்புத்தேன் கொண்டுவந்து கூட்டிப் பிசைந்துருட்டி
பண்டாரம் பண்டாரம் பசியாரும் என்றுரைத்தாள்
வேலனுரு மாறிவந்த வேதியரும் யேதுசொல்வார்
கைகள் நடுங்குதடி காரிழையே யெந்தனுக்கு

தலையும் நடுங்குதடி தையலரே யெந்தனுக்கு
வாய்க்கு கையெட்டாது மாத்திளங் கொடியே
அள்ளிக் கொடுத்தியென்றால் அதிக பலனுண்டாகும்
உருட்டிக் கொடுத்தால் ஒருகோடி மோட்சமுண்டு
பாங்கிமார் தன்னுடனே பாவையருந் தானுமப்போ
வாயிலே யள்ளிக் கொடுத்தாளே வள்ளியம்மாள்
அஞ்சுருண்டைத் தின்று ஆவல் தெளிந்தபின்பு
மாவுருண்டைத் தின்று மயக்கந் தெளிந்தபின்பு
எட்டியுங் காஞ்சிறையும் பிடித்துப் பிழிஞ்சு வந்து
தினைமாவைக் கூட்டிக் குடித்தியோடி தேன்மொழி
காதை அடைக்குதடி களைதாங்கிப் போகுதடி
நாக்கை வரளுதடி நமனங்கள் சோர்ந்தடி
தண்ணீர் கொடுத்தி யென்றால் தசகோடி மோட்சமுண்டு
சாகிறண்டி சாகிறண்டி தையலரே பெண்ணே வள்ளி
மாளுரண்டி மாளுரண்டி மாதரசே பெண்ணே வள்ளி
சாலக்கிழவன் தரையிலே தான்விழுந்தார்
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்கு தான்திகைத்துத்
தூக்கி யெடுத்துத் தோகையர்கள் யெல்லோரும்
கையிலா கையாகவே கன்னியர்கள் எல்லோரும்
சோலையருகே கொண்டுவந்து சோபந் தெளியுமென்று
அள்ளிக் குடியுமய்யா ஆவல் தெளியுமய்யா
வாரிக்குடியு மென்றாள் மயக்கந் தெளியுமென்றாள்
வேலருரு மாறிவந்த வேதியரு மப்போது
அள்ளிக் குடித்தாரே ஆவல் தெளிந்தாரே

தண்ணீரைக் குடித்துத் தாபந் தெளிந்தபின்பு
சொருக்கின்று தான் சருக்கிச் சுனையில் வீழ்ந்தாரே
காலைப் பரப்பிறதுங் கையை விரிக்கிறதும்
வாயைப் பிளக்கிறதும் வா ... புரிகிறதும்*
சாகிறண்டி சாகிறண்டி தையலரே பெண்ணே வள்ளி
உயிரிழந்து போகுதடி உத்தமியே பெண்ணே வள்ளி
கையைப் பிடித்துக் கரைமீதில் யேற்றுமென்றார்
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்குந் தான்திகைத்து

## விருத்தம்

சிவசிவா வென்று வள்ளி
    தேகமும் நடுந டுங்கி
தவமுனி தாகந் தீர்க்க
    தயவுடன் அழைத்து வந்தோம்
அவகெட மாக இந்த
    அய்யர்தம் முயிர்போம் யென்று
நவமணி யான வள்ளி
    நங்கை கைநீட் டினாளே. (8)

## வேதியராய் வந்த வேலர் வள்ளியை மணம்புரிய வேண்டுமெனல்

கையைப் பிடித்துக் கரைமீதி லேறிவிட்டார்
கைப்பிடித்தாள் கைப்பிடித்தாள் கன்னிப் பெண்
கைப்பிடித்தாள்
கன்னியுந் நானும் கைகோர்வை யாகிவிட்டோம்
வள்ளியுட நானும் மனையிலிருக்கவேணும்
மாது திருக்கழுத்தில் மங்கிலியம் சூட்ட வேணும்
இருபேருங் கூடி இன்பமுடன் வாழ வேணும்
கூனக்கிழவன் குதித்து மெத்த கூத்தாடினான்
அப்போது வள்ளியம்மாள் ஆரணங்கு தான்பார்த்து
கடுங்கோபங் கொண்டு கன்னியரும் யேதுசொல்வாள்

## வள்ளி கோபம் கொள்வல்

செத்து கிடந்து சொரித்தவளை திங்காமை
மாண்டு கிடந்து மகரமீன் திங்காமை
இழுத்துவிட்ட தோசமில்லோ எகத்தாளம் பேசுகிறான்
பாங்கிமார் தன்னுடனே பாவையரும் யேதுசெல்வாள்
மாருமுள்ளு வெட்டிவந்து இவன்வாயி லடியுமென்றாள்
கயிறெடுத்து வந்து கட்டிச்சுருட்டு மென்றாள்
சுருட்டியே கட்டிச் சுனையிலே போடுமென்றார்
வேலருரு மாறிவந்த வேதியரும் யேதுசொல்வார்
கயிறெடுத்து வந்து கட்டவுந்தான் ஞாயமுண்டோ

உன்கையாலே யென்னை கட்டியணை யுமென்றார்
மாருமுள்ளுக் கொண்டுவந்து வாயிலடிப் பதென்ன
மார்கொடுத்து யென்னை மருவியணை யுமென்றார்
அவ்வார்த்தைக் கேட்டு ஆரணங்கு கோபமதாய்
பாங்கிமார் தன்னுடனே பாவையரும் யேதுசொல்வாள்
வேதியனு மல்ல விருத்தக் கிழவனல்ல
கன்னியரே நம்மைக் களவுசெய்ய வந்தவன்டி
தேன்மொழியே நம்மைசிறை யெடுக்க வந்தவன்டி
இவனெதிரே நின்றால் எமக்குவரும் மோசமென்று
அரிவையர்கள் எல்லோரும் அதிவேக மாகவந்து
பங்கிளிமார் எல்லோரும் பரண்மிதில் யேறிவிட்டார்
வேலருரு மாறிவந்த வேதியரு மப்போது
கொம்பனைமார் தன்னுடனே கூடத்துடர்ந்து வந்து
பங்கிளிமார் வீற்றிருக்கும் பரணெதிரே வந்துநின்று
காலைக் கடுக்குதடி கன்னியரே யெந்தனுக்கு
தொடையுங் கடுக்குதடி தோகையரே யெந்தனுக்கு
வாவென் றழைத்தாக்கால் மகிமைக் குறவாமோ
வாவென்று யென்னை வருந்தி யழைக்காட்டி
வலிய பரண்யேறியுன் மடிமீதி ருப்பனடி
என்னைக் கிழவனென்று எண்ணாதே ஏந்திழையே
கன்னியே நானுனக்குக் கணவனுமே யாவனடி
மாதரசே நானுனக்குக் மணவாளன் ஆவனடி
காமன் கணையாலே களைதாங்கிப் போகுதடி
உன்னைவிட்டுப் போனால் உயிரிழந்து போவேனடி

இரும்போடி யுன்மனது ஏந்திழையே பெண்ணேவள்ளி
கல்லோ இரும்பே கன்னியரே யுன்மனது
கொஞ்சம் இரங்கலையே கோதையரே உன்மனது
பாதம் பணிவேனடி பணிவிடைகள் செய்வனடி
தாளைப் பிடிப்பேனடி உன் தனக்கடிமை யாவேனடி
உத்தமியே நானுனக்கு ஊழியர்கள் செய்வனடி
நாயகியே நானுனக்கு நமஸ்காரம் செய்வனடி
இன்னம் இரங்கலையோ ஏந்திழையே பெண்ணேவள்ளி
வேதியர்சொல் கேட்டு மெல்லிநல்லாள் கோபமதாய்
பாங்கிமா ரெல்லோரும் பரணைவிட்டுக் கீழிறங்கி
இந்தக் கிழவன் எனக்கெதிரே நில்லாமை
பிடரியிலே கைபோட்டுப் புறத்திலே தள்ளுமென்றாள்
மாயக் கிழவன் மனக்குறைகள் உண்டாகி
கற்றவித்தை யெல்லாம் காட்டி மறைந்தாலும்
கன்னியொரு ........................................ *
தெய்வானை மாது சிரித்து நகைப்பாளே
நாரத மாமுனியும் நம்மை நகைப்பாரே

## விநாயகரைத் துணைக்கழைத்தல்

தழைத்த மரத்தடியில் தவசியரும் வந்திருந்து
விரும்பியுடன் பிறந்த விநாயகரைத் தான்நினைத்து
அம்பிகையாள் ஈன்றெடுத்த அத்திமுகத் தோனே
சங்கரனார் ஈன்றெடுத்த தந்திமுகத் தோனே

---

* சுவடி சிதைவு பெற்றுள்ளது.

என்னோ டுடன்பிறந்த யியல்வான விநாயகரே
ஆரணியந் தன்னில்ஒரு அரிவைதனைக் கண்டேனையா
பூலோகத்து கன்னியரோ பொன்னுலகில் மாதரசோ
கண்ட வுடனே களைதாங்கி போகுதய்யா
பார்த்த வுடனே பசிதாப மாகுதய்யா
அந்தக் கன்னிதனை மயக்கிக் கைவசமாக்கு மென்றார்
வேலவர் சொல்கேட்டு விநாயகரும் யேதுசொல்வார்
கன்னியரைக் கண்டு கலங்கித் தவிக்கிறதும்
மாதர்களைக் கண்டு மயங்கித் தவக்கிறதும்
எப்போதும் வேலவர்க் கிதுவே தொழிலாச்சு
மாதுதனை மயக்க மதயானை யாகிவிட்டார்
கன்னிதனை மயக்க காட்டானை யாகிவிட்டார்
மதுரை யழிக்கவந்த மதயானை யாகிவிட்டார்
மலைகள் நொறுங்கிறதும் மரங்க ளொடியுறதும்
வீறிட் டலறி மேலோகந் தத்தளிக்க
மாதுதினைப் புனத்தில் வந்தார் விநாயகரும்
கன்னியர் களெல்லாம் கண்டு நடுநடுங்கி
பங்கிளிய ரெல்லாம் பரணைவிட்டு கீழிறங்கி
சிதறியே ஓடிவிட்டார் தோழிமா ரெல்லோரும்
பங்கிளிமார் வள்ளியம்மாள் பரணைவிட்டு கீழிறங்கி
சுற்றிலும் பார்த்து தோகையரைக் காணாமல்
பக்கமெல்லாம் பார்த்து பாங்கியரைக் காணாமல்
என்னசெய் வோமென்று யேங்கிமுகம் வாடி
தழைத்த மரத்தடியில் தவசிதனைக் கண்டவுடன்

வஞ்சிய ரெல்லாம் மறைந்தோடிப் போயினார் அய்யாவே
வனத்திலே நின்று மயங்கித் தவிக்கிறேன் அய்யாவே
கன்னியர் எல்லாமுங் காணாமல் போகினார் அய்யாவே
கானகந் தன்னில் கலங்கித் தவிக்கிறேன் அய்யாவே
அரிவைய ரெல்லாம் அறியாமல் ஓடினாள் அய்யாவே
இந்த ஆரணியந் தன்னில் யானின்றலைகிறேன் அய்யாவே
ஆனை வந்தென்னை அதஞ்செய்ய போதுதே அய்யாவே
அஞ்சாதே யென்றென்னை யாதரிப்பா ரில்லை அய்யாவே
காட்டானை வந்தென்னைக் கண்டிக்கப் போகதே அய்யாவே
கானகத்தி லென்னைக் காப்பாரு மில்லையே அய்யாவே
மதயானை வந்தென்னை வதைசெய்யப் போகுதே அய்யாவே
வாவென் றழைக்க மனிதரு மில்லையே அய்யாவே
அன்னை பிதாவை அறியாமை மாளுகிறேன் அய்யாவே
நீரு தூளி செய்ய நெருங்கி வருகுதே அய்யாவே
நின்னை யல்லாதெனை ரட்சிப்பா ரில்லையே அய்யாவே.

## விருத்தம்

வெருண்டழு தழுது வள்ளி
வேதிய ரிடத்தில் வந்து
கருமத யானை யென்னைக்
கண்டியா தருளு மைய்யா
அருங்கிளி யான வள்ளி
அன்னமே யென்னை விட்டு
ஒருபொழு தகலே னென்று
உறுதிநீ சொல்லு மென்றார் (9)

உன்னைவிட் டகலே னென்று
உறுதியே சொன்ன மாது
தன்னையே யணைத்துக் கட்டி
தழுவியே முத்த மிட்டு
கன்னல்சேர் மொழியி னாளை
காட்டுநீ யானை யென்றார்
மின்னொளி யான வள்ளி
வேலரைப் புகழ்ந்து சொல்வார்

## வேலர் திருவுருவம் காட்டல்

தேன்மொழியாள் வள்ளி தெண்டனிட்டாள் அப்போது
தெண்டனிட்ட வள்ளிதனைச் சேவலருந் தான்பார்த்து
தையல் மனங்குளிர தத்துருவமாக வந்து
ஆறு முகமும் அமர்ந்த திருஅழகும்
பன்னிரண்டு கண்ணும் பரந்த திருஅழகும்
மாணிக்கம் போற்கிரீடம் வைரமுடி துலங்க
குழையிலணி மகர குண்டலங்கள் சோதிமின்ன
வைரக் கடுக்கண் மின்னமார்பில் பதக்கமின்ன
அஸ்தகடைய மின்ன ஆபரணஞ் சோதிமின்ன
தங்க .......... ....... சோதிமின்ன*
உத்திராசங் கண்டிகையும் ஒளிவிளங்க மார்பதனில்

......... .......... .........*

---

* சுவடி சிதைவுபெற்றுள்ளது

சதிரான வான்முகத்தில் சவ்வாதுப் பொட்டுமிட்டு
சரிகை வஸ்திரந்தான் தரிச்சுச் சாலுவையும் மேல்போட்டு
தையல்மனங் குளிர தத்துருவ மாகிவிட்டார்
ஏந்திழையாள் வள்ளி இருக்கண்ணால் தான்பார்த்து
கண்டுமன மகிழ்ந்து கன்னியரும் யேதுசொல்வார்

## விருத்தம்

வால மன்மத னுமல்ல
பார்கண் டறிவரு மல்ல
நீலமர நிறத்தோனு மல்ல
நின்மல ரிவரும் மல்ல
கோலமா மயில்மேல் யேரும்
குருபரன் இவர்தான் யென்று
வாலயமாக வள்ளி மகிழ்ந்து
மகிழ்ந்தடி வணங்கி னாளே. (11)

## வள்ளி வேலருடன் சேர்தல்

தெண்டனிட்ட வள்ளிதன்னை சேவலனுந் தான்பார்த்து
கட்டி யணைத்துக் கனிவாயை முத்தமிட்டு
மாதுடனே வீற்றிருக்க மலர்மண்டகம் அமைத்து
இருபேரு மாகவே இன்பமுடன் வீற்றிருந்து
வாச மிகுந்த மல்லிகைப்பூ முடித்து

இன்பமுடன் இலை ... தானருந்தி*
விசயன் சுமித்திரையை மேன்மையுடன் சேர்ந்தது போல்
மதனும் ரதியும் மகிழ்வுடனே சேர்ந்தது போல்
ஆரணியந் தன்னில் அரிவைதனைக் கைக்கலந்தார்
வள்ளிமலர் ஆனாள்மயில் வேலர் வண்டானார்
இந்த விதமாக இருந்தார் இருபேரும்
வையாபுரி நாதர் மயில் வாகன மழைத்து
மாதுநல்லாள் வள்ளிதன்னை மயில்மீதில் ஏத்திவைத்து
தானும் மயிலேறிச் சண்முக வேலாயுதனார்
காடு கடந்து கடியமலை கடந்து
சிந்தை மகிழ்ந்து திருச்செந்தூர் சென்றார்கள்
மாதுடனே வேலர் மயிலை விட்டுக் கீழிறங்கி
உத்தமியாள் வள்ளிதன்னை உட்கட்டில் செல்லுமென்று
வேலாயுதக் கடவுள் வெளி மண்டகத்திருந்து
பவளக்கால் கட்டிலிலே பள்ளிகொண்டார் ஆண்டவனும்
அப்போது வள்ளியம்மாள் அரண்மனையினுள் புகுந்து
தெய்வானைமாது திருவடியைத் தெண்டனிட்டாள்

## தெய்வானை வரவேற்றல்

தேவேந்திரன் புதல்வி தெய்வானை தான்பார்த்து
இங்கே இருமென்று சொல்லி இணையாசனங் கொடுத்தார்

* சுவடி சிதைவுபெற்றுள்ளது

## முருகன் வள்ளி திருமணம்

வள்ளிக்கும் வேலவர்க்கும் மணச்சடங்கு செய்யவென்று
அரண்மனைக ளெல்லாம் அலங்காரஞ் செய்தார்கள்
வள்ளிக்கும் வேலருக்கும் மலர் ஆசனம் போட்டு
தையநல்லாள் தெய்வானைச் சாமிக்கெதிரே வந்தாள்
மயல் தீர்ந்து வந்தவரே வாருமென்று தானழைத்து
உயிர் பிழைத்து வந்தவரே உட்காரும் வாருமென்று
வள்ளியும் வேலரையும் மலர் ஆசனத்தில்வைத்து
தேவாதி தேவரெல்லாம் திருமணங்கள்காணவென்று
தேவிமார் தன்னுடனே கணத்தில் வந்து சேர்ந்தார்கள்
வானுலகில் உள்ளவர்கள் வந்து நிறைந்திடவே
சத்தரிஷி முனிவர் தபோதனர்கள் வந்திறங்கி
உகந்துவந்த மாமுனிவர் ஓமம் வளர்த்தார்கள்
பதினெட்டு வாத்தியமும் பாங்குடனே தான் முழங்க
தேவ துந்துமி திம்திமென்று தான் முழங்க
சகலபேர்தான் மகிழ்ந்து சண்முக வேலாயுதரும்
வள்ளித்திருக்கழுத்தில் மங்கிலியந்தான் தரித்தார்
வன்னி பொரி இறைத்து மணவறை சுற்றி வந்து
கன்னியுடன் வேலர்கை கோர்வையாயிருந்தார்
அம்மி மிதித்து அருந்ததியும் காண்பித்து
பொன்னுலகில் தேவரெல்லாம் புஷ்பம் சொரிந்தார்கள்
வானுலகில் பெண்களெல்லாம் மணவாழ்த்து கூறிடவே
ஆயிரந் தாதியர்கள் ஆலரத்தி காட்டிடவே
பாலும் பழமும் பரிவுடனே தானருந்தி
இன்ப முடனே இருந்தார் அரண்மனையில்
வந்த வந்த பேர்களெல்லாம் மகிழ்வுடனே சென்றார்கள்

## வனக்குறவர் வருகை

அண்ணன்மார் ஏழ்பேரும் அரிவைதனைக் காணாமல்
வனக்குறவோர் யெல்லோரும் வள்ளிதனைக் காணாமல்
தேடியலைந்து சாமி திருஅடியைக் கண்டார்கள்
சிந்தை கலங்கித் திருச்செந்தூர் சென்றார்கள்
மயில்வேலர் வீற்றிருக்கும் மண்டபத்தில் வந்தார்கள்
வனக்குறவோர் யெல்லோரும் மலரடியைத் தெண்டனிட்டார்
வேணுமென்று சொல்லி விருப்பமுடன கேட்டாலும்
வலிய அழைத்து வந்து மணமுடிக்க மாட்டேனோ
தையலரைக் கொண்டு வந்து யென்சாதிக்கு ஈனம்வைத்தீர்
மாதரசைக் கொண்டுவந்து யென் வம்சத்துக்கு
ஈனம்வைத்தீர்
வனக்குறவர் மெத்த மனஸ்தாப மானார்கள்
அப்போது வேலவரும் அவர்கள் முகம் நோக்கி
சாதி குறவர் சம்மந்த மானீர்
வனக்குறவர் நீரெனக்கு மைத்துனரு மானீரே
வாவென் றழைத்து மரியாதை செய்துவைத்து
உகந்து மனமகிழ்ந்து உங்கள் பதிசெல்லுமென்றார்
வந்த குறவரெல்லாம் மகிழ்வுடனே தான் நடந்து
சந்தோஷ மாகவே தன்பதியில் சென்றார்கள்
சண்முக வேலாயுதருஞ் சந்தோசமா இருந்தார்
வள்ளி தெய்வானையுடன் மகிழ்வுடனே வாழ்ந்திருந்தார்
இந்தக் கதையை யெழுதிப் படித்தவர்கள்
பிரியமுடன் கேட்டவர்கள் புத்திரனைப் பெற்றிடுவர்
வருந்தியே கேட்டவர்கள் மைந்தர்களைப் பெற்றிடுவர்

**முற்றிற்று**

சரஸ்வதி விலாசத் தமிழ்த்தலைமைக்காரிகை
முதல் சகல கலைக்கு ஞானமுந்தெரிந்து
தெளிந்த பாண்டிக் கவிராஜருடைய
சகோதரி சொன்ன கதை.

**முற்றும்**

★ ★ ★ ★

# செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| | | |
|---|---|---|
| உன்னைவிட் டகலே | - | 10 |
| கண்ணே என் | - | 2 |
| கன்னியென்று | - | 7 |
| கையினில் படத்தை | - | 3 |
| சிவசிவா வென்று | - | 8 |
| தேன்மொழி தன்னை | - | 1 |
| பார்த்து மெய் | - | 6 |
| மண்டல மதிக்க | - | 5 |
| வனக்குறமாது | - | 4 |
| வால மன்மதனும் | - | 11 |
| வெருண்டழு தழுது | - | 9 |

# அருஞ்சொற்பொருள் அகராதி

| | | |
|---|---|---|
| அத்திமுகத்தோன் | - | யானைமுகத்தோன்; விநாயகர் |
| அயனார் | - | பிரமன் |
| ஆரணியம் | - | காடு |
| களை | - | அயர்வு |
| கானகம் | - | காடு |
| கிள்ளை | - | கிளி |
| சரம் | - | அசைவு; தனிமை |
| சித்திரம் | - | ஓவியம் |
| சிலாக்கியம் | - | புகழத்தக்கது |
| சோபம் | - | அழகு;ஒளி |
| தாதியர் | - | தோழியர் |
| தெண்டம் | - | வணக்கம் |
| தவசி | - | தவம்செய்பவன்; முனிவன் |
| பரண் | - | காவல்மேடை |
| பாங்கிமார் | - | தோழியர் |
| பிடரி | - | புறங்கழுத்து |
| பெண்டுகள் | - | பெண்கள் |
| பொஸ்த்தகம் | - | மயிலிறகு, சித்திரப்படாம் |
| வனம் | - | காடு |

* * *